1981 மே 5]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) தொழில் துவங்க முன்வரும் தொழில் முனைவோரிடமிருந்து குறைந்தது பத்து விண்ணப்பங்களாவது வருமாயின் தொழிற்பேட்டை அமைப்பதுபற்றி மேற்கொண்டு நடவடிக்கை தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தினால் எடுக்கப்படும்.

[முற்பகல் 9-10]

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் அதற்காக விண்ணப்பித்தால் அரசு ஆலோசிக்கும் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தப் பிரதேசம் மிகவும் பின்தங்கிய பிரதேசமாக இருப்பதாலும், அங்கே வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கின்ற காரணத்தாலேயும் அரசே முன்வந்து தொழிற்பேட்டையை அமைக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசுதான் அங்கே தொழிற்பேட்டை கட்ட முடிவெடுத்திருக்கிறது. சிட்கோ மூலம் கட்டப்படும். தொழில் முனைவர்கள் முன்வந்தால் அரசு கட்டிக் கொடுக்கும்.

பத்திரப் பதிவுத் துறையின் துணைப்பதிவாளர் பதவிகளுக்கான நேரடித்தேர்வு முறை.

*வினா எண் 971: திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு பத்திரப் பதிவுத் துறையின் சப்-ரிஜிஸ்தரார் பதவிகளுக்கு நேரடித் தேர்வு செய்யும் முறையைக் கைவிடுவதற்கு அரசிற்கு வேண்டுகோள் வந்ததுண்டா ?

(ஆ) ஆம் என்றால் அதற்கு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சப்-ரிஜிஸ்டிரார் பதவிக்கு அசிஸ்டென்டுகளுக்கு பிரமோஷனுக்கு இப்போது ஸ்டாக்னேஷன் பிரியட் 23 வருடத்திலே இருந்து 25 வருடங்கள் வரை இருப்பதன் காரணமாக அவர்

களுடைய பிரமோஷன் வாய்ப்புகள் பாதிக்கப்படுகிறது என்ற காரணத்தினால், இன்று நடைமுறையில் இருக்கக்கூடிய ரேஷியோ 1:2 என்பதை 1:3 ஆக மாற்றி அவர்களுக்கு விரைவிலே பிரமோஷன் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, இதுபற்றி சம்பந்தப்பட்டவர்கள் அரசுக்கு எழுதி இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் உணர்வுகளையும் வைத்துக்கொண்டு அரசு பரிசீலிக்கும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கமர்சியல் டாக்ஸ் டிபார்ட்மென்டில் இப்படிப்பட்ட ஒரு சலுகை செய்யப்பட்டது அரசுக்குத் தெரியுமா ? மூன்று வருட காலம் அங்கே நேரடியாக வெளியிலே இருந்து ஆட்களை ரெக்ரூட்மென்ட் செய்வதற்குப் பதிலாக, பிரமோஷன் கொடுத்து-3 வருட காலம் பிரமோஷன் மட்டும் கொடுக்கப்பட்டது என்பதோடு அதற்குப் பிறகு 1:2 என்பது 1:3 என்று மாற்றி கொடுக்கப்பட்டது. இது போன்று கமர்சியல் டாக்ஸ் டிபார்ட்மென்டில் அமல்படுத்தியிருப்பதன் காரணமாக இந்தத் துறையிலேயும் அதை நடைமுறைப்படுத்திக் கொண்டுவருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? அப்படி இன்று சப்-ரிஜிஸ்டிரார்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய பிரமோஷன் வாய்ப்பினை அதிகப்படுத்த, ஏற்கனவே மற்ற துறைகளிலே இப்படி செய்வதன் காரணமாக, அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல ஒரு பிரத்யேகமான சூழ்நிலையில், அதுவும் குடியரசுத் தலைவர் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நேரத்தில், வணிகத் துறையில் ஒரே நேரத்தில் அதிகமான எண்ணிக்கையில் நேரடி நியமனங்கள் செய்யப்பட்டது. அதன் விளைவாக பதவி உயர்வு தடைப்பட்டது. எந்த விகிதத்தில் போட வேண்டுமோ அந்த விகிதத்தில் போடாததினால் இந்தத் தவறுகள் நேர்ந்திருக்கின்றன. இவை ஏற்கனவே நடைபெற்றிருந்தது. எனவே பதவி உயர்வில் ஏற்பட்ட தேக்கநிலையைப் போக்க 3 ஆண்டுகளுக்கு நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த ஆணை முந்தைய நிலைக்குக் கொண்டு செல்ல வகை செய்யும்.

ஆனால் சார்பதிவாளர்களைப் பொறுத்தவரையிலும், அந்த விகிதப்படிதான் அதாவது 1:2 என்ற விகிதப்படிதான் கொடுக்கப்படுகிறது. அதிக எண்ணிக்கையில் நேரடி நியமனம் செய்யப்படவில்லை. ஆனால் உங்களுக்குத் தெரியும், நேரடி நியமனம் செய்வதன் நோக்கமே இன்றைக்கு அரசினுடைய கொள்கைப்படி 18 சதவீதம் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், மற்றும் உள்ள 50 சதவீதம் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது.

1981 மே 5]

அப்படி நேரடி நியமனம் தடை செய்யப்பட்டால் அல்லது குறைக்கப்பட்டால் சமுதாயத்திலே உள்ள பின்தங்கிய பகுதியினருக்கு (வீக்கர் செக்ஷன்ஸ்) அவர்களுடைய உரிமைகள் பாதிக்கப்படும் என்று கருதப்படுகிறது. என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் பரிசீலிக்கப்படும்.

திரு. ஆர். மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பத்திரப் பதிவு துறையிலே பதவி உயர்வு என்பது மிகுந்த பலகீனமானதாக இருக்கிறது. உதவியாளர்கள் சார் பதிவாளர்களாக வரவேண்டும் என்று சொன்னால், ஏறத்தாழ 15 ஆண்டுக்காலம் பிடிக்கிறது. அதைபோல, ஒரு இளநிலை உதவியாளர் சார்பதிவாளராக வரவேண்டும் என்று சொன்னால் 25 ஆண்டுகாலம் பிடிக்கிறது. நேரடி நியமனம் செய்யப்படுவதால் அனுபவசாலிகள் பின்னுக்குத் தள்ளப்படும் நிலை இருப்பதால்—நேரடி நியமனமே தேவையில்லை என்று நான் வாதிடத்தயாராக இல்லை—ஆனாலும் கூட அனுபவசாலிகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் அடிப்படையில், அவர்களுக்கு முன்னுரிமை வழங்கி தேர்வு செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது சம்பந்தமாக அந்தப் பணியாளர்கள் தரப்பிலிருந்து ஏராளமான விண்ணப்பங்கள் வந்து இருக்கின்றன. அதனை அரசு பரிசீலித்துக்கொண்டு இருக்கிறது.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிற நேரத்தில் எதிர்காலத்தில் பதவி உயர்வைப் பெருக்குவதற்காக இந்த முயற்சி எடுக்கப்பட்டது என்று சொன்னார்கள். 1978 லே இந்தத் துறையில் 60 நபர்கள் நேரடியாகத் தேர்வு செய்யப்பட்டது அரசுக்குத் தெரியுமா? அதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. நான் விசாரித்து அறிகிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் சொன்னதற்கு, சகோதரர் மணிமாறன் அவர்கள் அனுபவம் உள்ளவர்கள் பின்னுக்குத் தள்ளப்படும் நிலை உள்ளது என்று சுட்டிக்காட்டினார்கள். நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அனுபவ ரீதியாக உள்ளவர்களைப் பின்னுக்குத் தள்ளுவதைப்பற்றிச் சொல்லவில்லை. அரசாங்க

உத்தரவுப்படி தாழ்த்தப்பட்ட, மலைவாழ் மக்களுக்குக் கொடுக்க வேண்டிய, சேர வேண்டிய விகிதாச்சாரம் சேரவில்லை என்பது உண்மையா? அந்தத் துறையில் அந்த விகிதாச்சாரப்படி சேர்வதற்கு என்ன வழியை இந்த அரசு கடைப்பிடிக்கும் என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் சேராமல் இருக்கவில்லை. ஒரு நியதியைச் சொன்னேன். அரசாங்கத்தின் வழிமுறையைச் சொன்னேன்.

பொய்மான் குன்றை சுற்றுலா இடமாக அறிவிக்கும் திட்டம்.

*வினா எண். 972—செல்வி வி. விசயலட்சுமி :—மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், பொய்மான் கரடு என்ற சரித்திர பிரசித்தி பெற்ற குன்றை சுற்றுலா இடமாக அறிவிக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது அறிவிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :—(அ) இல்லை. அரசு எந்த இடத்தையும் சுற்றுலா இடமாக அறிவிக்கும் வழக்கம் இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

செல்வி வி. விசயலட்சுமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொய்மான் கரடு என்ற இடத்தை ராமாயண காலத்தோடு ஒட்டிப்பேசுகிறார்களே, அதற்கு ஏதாவது சான்றுகள் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, யாராவது ஆராய்ச்சியாளர்களிடத்தில் கேட்க வேண்டிய கேள்வியை அமைச்சரிடத்தில் கேட்பது நல்லதல்ல.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பொய்மான்கரடு என்ற இடத்தில் தெரிகிற ஒரு மாயமான் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்து பார்த்தால் தான் தெரிகிறது. அந்த இடம் தனியாருக்குச் சொந்தமான இடம் என்று சொல்லப்படுகிறது. அந்த நிலத்தில் பயிர் செய்கிற நேரத்தில் பார்வையாளர்களை பார்க்க விடாமல் அந்த நிலச்